முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 840

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.01.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுகனார் என் சூட்சுமமே
   அறமாக வாழுகின்ற மாதவமே
   மாறுதலை கலியில் செய்வேன் என்று
   மகா ஞானியாய் வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (பிலவ வருடம் தை மாதம் 3ம் நாள், 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை)
   வரமாக யான் அரங்கன் உன்பால்
   வையகத்தில் அருள் மழை பொழிந்துவர
3. வருகின்ற அரங்கன் உபதேசத்தின் வழி
   வடிவேலன் உலகை ஆளுவேன்
   தருகின்ற அரங்கன் தர்மத்தின் வழி
   தரணியில் வறுமையை போக்குவேன்
4. போக்கியே உலகை நல்லுலகமாக்கி
   புண்ணியவழியில் உலகோரை வழிநடத்தி
   ஆக்கமுடன் ஞான ஆட்சிதனை
   ஆறுமுக அரங்கன் வழிவழி யான் உலகுக்கு நடத்துவேன்
5. நடத்தவே நன்மை புரியவும்
   ஞானவான்களை இன்னும் பெருக்கவும்
   இடரின்றி ஆறுமுகப்பெருமான் யான்
   இனிதே அரங்கனோடு சக்தியாய் இணைந்திருக்க
6. இருக்கின்ற அரங்கன் கரம்படவே
   இந்த உலகில் எவரெல்லாம் தீட்சை பெறுகின்றாரோ
   கருத்தாக அரங்கன் சொல் செயல்வழி
   கருணைபட உலகில் நடக்கின்றாரோ
7. நடக்கின்ற மக்கள் கூட்டமெல்லாம்
   ஞானிகள் கலியில் ஆவது உறுதிஉறுதி
   இடரை வென்று இவர்களெல்லாம்
   இனி பிறவாத பெரும்பேறு அடைவது உறுதிஉறுதி

8. உறுதி தந்து ஆறுமுகன் அரங்கனோடு
உண்மைபட அருளாற்றல் புரிந்துவர
கருதி அரங்கன் சேவைக்குள்ளே
கன்னியமிக்க அரங்கன் தர்மத்துக்குள்ளே

9. உள்ளாக வருகின்ற மக்கள் கூட்டம்
உயர்வடைவது உறுதி உறுதி
சொல்லவே அரங்கன் வழிவழி
சுத்த ஞானிகள் உருவாகி இன்னும் உலகம் ஞானிகள் ஆட்சி பெறுவது உறுதி உறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–